
பாலகுமாரன்
தாயுமானவன்

# தாயுமானவன்

"வெட்கம் விண்டு போயிற்று."

"என்ன?"

"வெட்கம் உடைய, வெகுளித்தனம். வெகுளியும் மறைய நிர்மலம்."

"என்ன சொல்றீங்க."

"உன்னால பிச்சையெடுக்க முடியுமா?"

"யோவ்... எழுந்து போய்யா..."

"போவேன். எழுந்து எங்கயாவது போவேன். நீ எங்கு போவாய். போய் விட்டு மறுபடி இங்கு வருவாய். கோபத்தோடு போவாய், கோபம் கரைய வருவாய். மறுபடி கோபித்துக் கொள்வாய்."

பரமு திகைத்தான் என்ன சொல்கிறது கிழம்?

"வாங்கியவன் கை வானம் பார்க்கும். வழங்குபவன் கை பூமியை மறைக்கும்."

"கவிதை எழுதிட்டிருந்தீங்களா...?"

"நீயுமொரு பிச்சைக்காரன், வெட்கம் விட்டுப் பிச்சை கேளேன்."

"புரியலீங்க."

"போ. போய்த் தூங்கு."

"தூக்கம் வரலீங்க."

"இப்போது விழித்துக் கொண்டா இருக்கிறாய்."

"புரியலீங்க."

"நிறைய ஆசை இருக்கிறதல்லவா."

"ஆமாங்க."

"ஆசையெல்லாம் கனவாய்த் தெரிகிறதல்லவா?"

"ஆமாங்க."

"கனவு எப்போ வரும்?"

"தூங்கற போது."

"இப்போது நீ என்ன செய்கிறாய்?"

பரமு விழித்தான். கிழம் கைகொட்டிச் சிரித்தது.

பரமு அருகே உட்கார்ந்து கொண்டான்.

"தப்பா பேசியிருந்தா மன்னிச்சுக்கங்க. உங்களைப் பார்த்தா பிச்சைக்காரனா தெரியலீங்க."

"உன்னைப் பார்த்தால் எனக்குத் தெரிகிறது."

"எப்படி."

"பிச்சைக்காரனாய்."

"சில விஷயம் புரியலைங்க."

"பிட்சை கேட்கிறாயா?"

"புரிய வச்சா நல்லா இருக்குங்க."

"வாங்குபவன் கை வானம் பார்க்கும். வழங்குபவன் கை பூமியை மறைக்கும். கொட்டி இறைத்திருக்கிறதே... எடுத்துக் கொள்."

"எதை எடுக்கிறது, எதை விடுறதுனு தெரியலீங்க."

"அன்பை விடு."

"ஐயா..."

"அன்பை விடு."

"அன்பு நல்ல விஷயம் இல்லீங்களா?"

"ஆசையின் விளைவு அன்பு."

"ஆசைப்படாதேங்கறீங்களா?"

"ஆசையில்லாத போது அன்பு வருமா...?"

"ஆசைப்படாம இருக்கறது எப்படீங்க?"

"ஆசை எங்கிருந்து வருகிறது?"

"தெரியலீங்க."

"கேள்."

"கேக்கறேங்க."

"உன்னைக் கேள். ஆசை எங்கிருந்து வருகிறது?"

"மனசுலேர்ந்து."

"மனசு என்பது எது?"

"புரியலீங்க."

"பிச்சையெடு."

"ஐயா.."

"மண்டி போட்டுப் பிச்சை கேள்."

"உங்ககிட்டயா."

"உன்னிடத்தில்."

பரமு தலையைப் பிடித்துக் கொண்டான். தன்னிடத்தில் மண்டியிட்டு பிச்சை கேட்டல்... என்ன பிச்சை. தன்னிடத்தில் என்பது என்பது தன் நெஞ்சுக்குள்.

தான் என்பது தன் உடம்பு உருவம். உள்ளேயிருக்கிறது. என்னிடம் என் உருவம் மண்டியிடுகிறது. சரி, உள்ளே என்ன இருக்கிறது... நினைப்பா, யோசனையா, புத்தியா... உணர்வா, உள்ளே என்ன...?

நெற்றிக்குள் நீலம் படர்ந்து, நீலம் கறுப்பாயிற்று. கறுப்பு மேலும் விழுந்து இருட்டாக.. ஒளிப் புள்ளி தோன்றியது.

அடேய்... உடம்பு சிலிர்த்துப் போட்டது. உள்ளே அமிழ்வது தெரிந்தது. ஒளிப்புள்ளி விரிவாயிற்று. என்ன கேட்பது... என்ன... என்ன... மறந்து போயிற்று.

கேட்க ஒன்றுமில்லை. கேள்வியில்லை. பதிலுமில்லை. அடேய்... அடேய்... எவ்வளவு பெரிய வெளி...

"அதுதான்... அதுதான்" என்றது கிழம்.